
# பெரும் அச்சுறுத்தல் கண்ணய்யா அல்ல வேலையில்லா திண்டாட்டம் தான்..

குர்சரண் தாஸ்

பல்வேறு முரண்பாடுகளைக் கொண்ட மிகப் பெரிய தேசம் இந்தியா. பிப்ரவரி – மார்ச் மாதங்களில் வட மாநிலத்தில் மிகப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது மாணவர் போராட்டம்தான். இதற்கு தலைமை தாங்கிய கண்ணய்யா குமார் மீது தேச துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலையானார். ஆளும் பாஜக அரசுக்கு கண்ணய்யா மிகப் பெரும் அச்சுறுத்தல் அல்ல. ஆனால் அவரை போராட்ட களத்துக்கு இழுத்தது எது?

2014-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, காங்கிரஸ் அரசின் ஊழல் செயல்பாடுகளால் லட்சிய இளைஞர்கள் நொந்து போய் களைத்துவிட்டனர். காங்கிரஸின் செயல்பாடு நாட்டை மேலும் ஏழ்மைக்குள்ளாக்கியுள்ளது என்ற மோடியின் பேச்சு அவருக்கு பல இளைஞர்களின் வாக்குகளைப் பெற்றுத் தர முன் வந்தது. மோடி மேற்கொண்ட 400 தேர்தல் பிரசார கூட்டத்தை ஒரு கம்ப்யூட்டர் வல்லுநர் ஆய்வு செய்து பார்த்தபோது அதில் 400 முறைஹிந்துத்வா குறித்துபேசியுள்ளது புலனாகியது. இருப்பினும் வேலையில்லாத இளைஞர்கள் பலரும் மோடிக்கு ஆதரவாக வாக்களித்தனர். இந்தியாவில் ஹிந்துத்வா கொள்கை கொண்ட ஒரு வலதுசாரி கலாசார கட்சியை மோடி உருவாக்குகிறார் என்ற தொனி தோன்றியது. இது அமெரிக்காவில் உள்ள குடியரசு கட்சி மற்றும் பிரிட்டனில் உள்ள டோரி கட்சி போன்று இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.



குர்சரண் தாஸ்

இந்துத்வா கொள்கையோடு வலதுசாரி பொருளாதார சிந்தனை கட்சியாக இது இருக்கும் என்ற எண்ணம் மேலோங்கியது. அதே சமயம் ஆர்எஸ்எஸ் அமைப்புகளின் ஆதிக்கத்தை கட்சியில் மோடி கட்டுப்படுத்துவார் என்றே பலரும்நம்பினர். ஏனெனில் குஜராத்தில் அதை மோடி மிகச் சரியாக கையாண்டிருந்தார். மத்தியில் இதை சரியாகக் கையாண்டிருந்தால் அமெரிக்காவின் ரொனால்டு ரீகனைப் போலவோ அல்லது பிரிட்டனின் மார்கரெட் தாட்சரைப் போலவோ மிகப் பெரும் பாராட்டை மோடி பெற்றிருப்பார். ஆனால் அதை மோடி செய்யத் தவறி விட்டார் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான் மாணவர்கள் நடத்திய போராட்டமும் அதை அரசு கையாண்ட விதமும்.

அரசு தனது பட்ஜெட்டில் அதிக வேலை வாய்ப்பை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளது. அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளன. கிராமப்புற பெண்களுக்கு சமையல் எரிவாயு கிடைக்க வசதி ஏற்படுத்தித் தருவதாக அறிவித்ததன் மூலம் பல லட்சக்கணக்கான குடும்பப் பெண்கள் விறகு அடுப்பு எனும் நெருப்புச் சூளையில் தினசரி படும் அவதிக்கு முற்றுப்புள்ளி கிடைத்தது என்றே தோன்றியது.

அடுத்தது ஆதார் அட்டைக்கு வழங்கப்பட்ட சட்டப்பூர்வ அங்கிகாரம். இதன் மூலம் அரசின் மானிய உதவிகள் அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு செல்லும் வழி ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் 98 கோடி பேரிடம் ஆதார் அட்டை இருப்பது மற்றும் 20 கோடி குடும்பங்களுக்கு வங்கி சேமிப்புக் கணக்கு இருப்பதும் மிகப் பெரும் சாதனை. அடையாள அட்டை வழங்கும் முயற்சியில் கருத்து வேறுபாடு இருப்பினும் ஆதார் அட்டை இதன் மீது தோன்றிய சந்தேகங்களைப் போக்கிவிட்டது.

ஆனால் ஆதார் அட்டைக்குக் கிடைத்த வரவேற்பைக் காட்டிலும் கண்ணய்யா குமார் மிகவும் பிரபலமானவர் ஆகிவிட்டார். ஏனெனில லட்சக்கணக்கான வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்று தேர்தலின் போது அளித்த வாக்குறுதியை மோடி நிறைவேற்றத் தவறிவிட்டார்.

மாணவர் தலைவரான கண்ணய்யா குமார் மீது தேச துரோக வழக்கு போடப்பட்டது, பாஜகவின் கலாச்சார வலதுசாரி சித்தாந்தத்தை சிதைத்துவிட்டதோடு லட்சக்கணக்கான வேலையில்லா இந்திய இளைஞர்களின் கனவையும் தகர்த்துவிட்டது. இந்த விஷயத்தை மோடி சரிவர கையாளத் தவறிவிட்டார்.

அமெரிக்காவில் தேச துரோகக் குற்றம் ஒருபோதும் மன்னிக்கப் படுவதேயில்லை என்று கண்ணய்யா குமாரை சிறையில் அடைத்தபோது மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதை நினைக்கும்போது, அமெரிக்காவில் 1977-ம் ஆண்டு இலினாய்ஸ் மாகாணத்தில் ஹிட்லர் பிறந்த நாளை நாஜி கட்சியினர் கொண்டாடினர். அதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று இப்பகுதியில் அதிகம் வசித்த யூதர்கள் சிகாகோ நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். ஆனால் யூதர்களின் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கவில்லை. அமெரிக்காவுக்கு எதிராக செயல்பட்ட ஹிட்லரின் பிறந்த நாளைக் கொண்டாட அனுமதி அளிக்கும் அளவுக்கு அந்நாட்டில் பேச்சு சுதந்திரம் உள்ளது. ஆனால் இங்கோ...

இந்தியாவில் இப்போது வேலையில்லாத் திண்டாட்டத்தைவிட பெரும் பிரச்சினை ஏதும் இல்லை. இளைஞர்கள் வளமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்கின்றனர். 1991-ம் ஆண்டுக்குப் பிறகு கொண்டு வரப்பட்ட தாராளமய கொள்கைகள் லைசென்ஸ் ராஜ் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட இடதுசாரிகளின் நிலைப்பாடு இப்போதைய சூழலில் பொருந்தாது. ஆனால் உள்துறை அமைச்சரின் செயல்பாடு கண்ணய்யாவை ஒரு மாவீரனாக மாற்றிவிட்டது.

இப்போதைய சூழலில் விரைவான பொருளாதார வளர்ச்சி மூலம் வேலை வாய்ப்பு உருவாகாத பட்சத்தில் மாணவர்கள் போராட்டம் இன்னமும் அடுத்தடுத்த வளாகங்களில் வெடிக்கத்தான் செய்யும்.

கண்ணய்யா இந்தியாவுக்கு மிகப் பெரும் அச்சுறுத்தல் என்று நினைப்பது தேவையற்றது. ஆனால் உண்மையான அச்சுறுத்தல் வேலையில்லாத் திண்டாட்டம்தான்.

வெறும் இந்துத்வா முழக்கம் மட்டுமே மக்களவையில் 292 இடங்களை தங்களுக்குப் பெற்றுத் தரவில்லை என்பதை மோடி உணர வேண்டும். மிகச் சிறப்பான பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ள அதே நேரத்தில் வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உள்ளது என்பதை உணர வேண்டும்.

குர்சரண் தாஸ்
gurcharandas@gmail.com




யுனெஸ்கோ அமைப்பால் ஆண்டுதோறும் ஏப்ரல் 18-ம் தேதி உலக பாரம்பரிய தினம் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி ஹைதராபாதில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க சார்மினாரில் நேற்று கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. படம்:கே.வி.எஸ்.கிரி

# அதிக விளைச்சலால் வெங்காயம் விலை உயராது

ஆர்.ஷபிமுன்னா

**புதுடெல்லி**

டெல்லி சட்டப்பேரவை தேர்தல் நேரங்களில் வெங்காய விலை உயர்வு அரசியல் பிரச்சினையாகி மாநில அரசுகளை காவு கேட்டதுண்டு.

இந்த ஆண்டு வெங்காயம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் நாடு முழுவதும் அதன் விலை உயர வாய்ப்பில்லை எனத் தெரியவந்துள்ளது.

டெல்லியின் மொத்த வியாபார சந்தையான ஆசாத்பூர் மண்டியில் வெங்காயம் 1 கிலோ ரூ.5 என்ற விலையில் விற்கப்படுகிறது. இதையே சில்லறை வியாபாரிகள் கிலோ ரூ. 18 முதல் ரூ. 20 வரை விற்பனை செய்கின்றனர். ஆசாத்பூர் மண்டிக்கு வெங்காய வரத்து தற்போது அதிகரித்து விட்டதே, விலை குறைந்ததற்கு காரணம். இங்கு வழக்கமாக தினமும் சுமார் 25 லாரிகளில் வந்து கொண்டிருந்த வெங்காயம் தற்போது 50-க்கும் மேற்பட்ட லாரிகளில் வருகிறது. இதில் மத்தியப் பிரதேச மாநிலத்தில் இருந்து வரும் நீமச் என்ற வகை வெங்காயம் கிலோ ரூ. 2-க்கு விற்கப்படுகிறது. தரம் குறைந்த வகை வெங்காயம் வெறும் 35 பைசாவுக்கு ஆசாத்பூர் மண்டியில் கிடைக்கிறது.

இது குறித்து 'தி இந்து' விடம் ஆசாத்பூர் மொத்த வியாபாரிகள் சங்க முன்னாள் தலைவர் ராஜேந்தர் சஹானி கூறும்போது, "இந்த ஆண்டு நாடு முழுவதிலும் வெங்காய விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் அடுத்த ஆண்டு வரை வெங்காயம் விலை உயர வாய்ப்பில்லை. இது விவசாயிகளுக்கோ அதிக நஷ்டத்தை அளித்துள்ளது. விவசாயிகளுக்கு 1 கிலோ வெங்காயம் பயிர் செய்வதற்கான செலவு மட்டும் ரூ.12 ஆக உள்ளது" என்றார்.

ஆசாத்பூர் மண்டியில் வெங்காய வரத்து அதிகமாக உள்ளது. வழக்க மாக எழும் வெங்காய விலை உயர்வு புகாரில் இருந்து மத்திய அரசுக்கு தப்பிக்க இது உதவியுள்ளது.

டெல்லியில் கடந்த 2014-ல் சட்டப் பேரவை தேர்தலுக்கு முன் குடியரசுத் தலைவர் ஆட்சி நிலவியபோது, வெங்காயத்தின் விலை கிலோ ரூ.100-ஐ தொட்டது. இதை சமாளிக்க 200 முக்கிய இடங்களில் வேன்களில் வைத்து வெங்காயம் விற்க துணைநிலை ஆளுநர் நஜீப் ஜங் உத்தரவிட்டிருந்தார். இதற்கு முன் 2008-ல் டெல்லி சட்டப்பேரவை தேர்தல் நேரத்தில் வெங்காயத்தின் விலை ரூ.100 வரை உயர்ந்தது. வெங்காயத்தை கோர்த்து மாலையாக அணிந்து எதிர்க்கட்சிகள் அப்போது தீவிரப் பிரச்சாரம் செய்தன. அப்போது ஷீலா தீட்சித் தலைமையிலான காங்கிரஸ் அரசு வேன்களில் வெங்காயம் விற்பனை செய்தது.